21st January 1961]

THE HON. SRI C. SUBRAMANIAM : வ. உ. சிதம்பரம் பிள்ளை அவர்களுக்குக் கோவை சிறையில் நினைவுச் சின்னம் நிறுவும் யோசனை இல்லை. அவர்கள் பிறப்பிடமாகிய ஓட்டப்பிடாரத்தில் நினைவுச் சின்னம் ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது.

S.S.L.C. Examination

* 69 *Q.*—SRI T. S. RAMASWAMY : Will the Hon. the Minister for Finance be pleased to state the nature of encouragement given by the Government to the High Schools which produced cent per cent results in the S.S.L.C. Examination for the past two years?

THE HON. SRI C. SUBRAMANIAN : None of the High schools in this State produced cent per cent results in the S.S.L.C. Public Examinations held during the last two years. The schools that produced 75 per cent and more of passes were commended.

SRI A. VEDARATHNAM : நூற்றுக்கு நூறு மாணவர்கள் எஸ்.எஸ்.எல்.ஸி. பரிட்சையில் தேறிய பள்ளிகளுக்கு அரசாங்கம் என்ன ஊக்கம் கொடுக்க முன்வரும்? இதுவரை என்ன செய்திருக்கிறார்கள்?

THE HON. SRI C. SUBRAMANIAM : பாராட்டுதல் தெரிவிக்கப் படுகின்றன.

SRI V. K. KOTHANDARAMAN : ஸார், எஸ்.எஸ்.எல்.ஸி. பரிட்சையில் நூற்றுக்கு நூறு மாணவர்கள் தேறும் அல்லது அதைவிட 5, 10, 20 சதவிகிதம் குறைந்து தேறும் உயர்நிலைப் பள்ளிகளை மட்டும் தூண்டுவிக்கப்படுகிறதா? அல்லது ரொம்ப குறைந்த பாஸ் செய்யும் உயர்நிலைப் பள்ளிகளையும் தூண்டுவிக்கப் படுகிறதா? என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : இரண்டையும் தூண்டு விக்கப்படுவது உண்டு. ரொம்ப குறைவாக தேறும் பள்ளிகளை இன்னும் நன்றாக போதிக்க வேண்டுமென்று தூண்டுவிக்கப்படு கிறது. அதே மாதிரி நிறைய மாணவர்கள் தேறும் பள்ளிகளுக்கு பாராட்டுதல் தெரிவிக்கப்படுகின்றது.

SRI A. A. RASHEED : Is it a fact that there was a large percentage of failures in the recent S.S.L.C. Examination and if so, may I know the reasons for failures?

(No answer)

SRI A. VEDARATHNAM : நன்றாக நடத்தப்படுகின்ற பள்ளி களுக்குப் பரிசுத் திட்டம் வைத்திருக்கிறார்கள். அதேபோல் நூற்றுக்கு நூறு மாணவர்கள் தேறுகின்ற பள்ளிகளுக்கு இந்தப் பரிசுகள் வழங்கப்படுமா?

[21st January 1961

THE HON. SRI C. SUBRAMANIAM : எந்தப் பரிசைக் குறிப்பிடுகின்றார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. ஆனால், அப்படி நூற்றுக்கு நூறு தேறும் பள்ளிகளுக்குப் பரிசு கொடுக்கும் திட்டம் இருந்தால், அவர்களுக்கு அந்தப் பரிசு கொடுக்கப்படும்.

Cases of dog bite

* 70 *Q.*—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether there is any increase in the number of cases of dog bite reported in Government Hospitals in the Madras City; and

(*b*) if so, the steps taken to remove stray dogs in the City?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) Yes, Sir. The number of dog bite cases treated in the City State Hospitals (except the specialist institutions) has increased during the current year as compared to the previous years.

(*b*) Intensive action has been and are being taken by the Corporation of Madras to abate the nuisance of stray and unlicensed dogs by arranging for frequent raids by dog vans in all parts of the City to round up and remove such dogs to the Corporation Lethal Chamber at Basin Bridge for destruction.

SRI A.A. RASHEED : Is the Hon. Minister aware that stray dogs will continue to roam in big numbers in the Madras City and if so, will the Government come forward to aid the Corporation for the purchase of additional vans to catch these stray dogs?

THE HON. SRI M. A. MANICKAVELU : It is primarily the responsibility of the Corporation of Madras and now they have increased their activities. Probably, as has been stated with regard to a question about schools just a few minutes ago, a little more ' thoonduthal ' will be done here also.

SRI S. NAGARAJA MONIGAR : இந்த நாய்க் கடிகளெல்லாம் லைசென்ஸ் பெறாமல் தெருவிலே திரிகின்ற நாய்களால் ஏற்படுகின்றனவா? அல்லது லைசென்ஸ் பெற்று சொந்தக்காரர்களால் வளர்க்கப்படுகின்ற வீட்டு நாய்களால் ஏற்படுகின்றனவா? அப்படியானால் அதற்கான கணக்குகள் உண்டா?

THE HON. SRI M. A. MANICKAVELU : வீட்டிலே உள்ள நாய்கள் கட்டிப்போட்டு இருப்பதால் அவைகள் கடிக்காது. தெருவிலே உள்ள நாய்கள்தான் கடிக்கும்.

Cement

* 71 *Q.*—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Works be pleased to state whether the Government of India have made any suggestion to this Government for abolishing the Cement Licensing System?